# 4

# பிக்ஹுல் உஸ்ரா

## 4.1 இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை

மனிதன் தனித்து வாழ இயலாதவன். பிறந்தது முதல் தாயின் அரவணைப்பும், தந்தையின் பராமரிப்பும் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவைப்படுகின்றன. குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் என்போர் முக்கிய உறுப்பினர்களாவர். உலக வாழ்க்கை இயக்கம் பெறுவதற்காக அல்லாஹ் அனைத்தையும் சோடி சோடியாகப் படைத்திருக்கின்றான். அதுபோல் மனிதனையும் ஆண், பெண் என்ற சோடியாகவே படைத்திருக்கிறான். ஆதம், ஹவ்வா ஆகிய முதல் மனிதசோடியிலிருந்தே அல்லாஹ் பூமியில் மனித இனத்தை விருத்தி செய்தான். உலகில் ஆண்களுக்குப் பெண்களும், பெண்களுக்கு ஆண்களும் துணையாக இருப்பதுதான் இறை ஏற்பாடாகும்.

இஸ்லாம் ஆண், பெண் தொடர்பை இல்லறத்தின் மூலம் கண்ணியப் படுத்தியுள்ளது. திருமணம் என்ற கண்ணியமான உறவின் மூலம் இல்லறத்தை மேற்கொண்டு, நல்லொழுக்கம் உள்ளவனாக வாழ்வதற்கும், அல்லாஹ்வுக்கு வழிபட்டு மறுமைக்காகச் செயற்படுவதற்கும். குடும்ப வாழ்வில் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோருக்கிடையில் பரஸ்பர அன்பும் உறவும் காணப்பட வேண்டும். ஆதலால் கணவருக்குரிய கடமைகள், உரிமைகள் மனைவிக்குரிய கடமைகள், உரிமைகள் பெற்றோர் பிள்ளைகளுக்குரிய கடமைகள், உரிமைகள் என்பன இஸ்லாத்தில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

மனைவி, பிள்ளைகளின் பாதுகாப்பைக் கணவன் பொறுப்பேற்றுள்ளான். அவர்களுக்கு உணவு, உடை, வீடு வசதிகளைச் செய்து கொடுப்பது, இஸ்லாமியக் கடமைகளையும், நடைமுறைகளையும் பின்பற்றி வாழப்பழக்குவது, அவர்களின் கல்வி, சுகவாழ்வு (சுகாதார வசதி) போன்றவற்றிற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது, அவர்களை அன்புடன் வழிநடாத்துவது, இத்தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக உழைப்பது, செலவிடுவது போன்ற கடமைகளைச் செய்ய வேண்டும்.

இதனால் தான் திருமணம், வாழ்க்கையின் உயர்வுக்கு மூலகாரணம் என அல்-குர்ஆன் எடுத்துக் கூறுகின்றது.

‘‘வறிய நிலையில் உள்ளவர்களை அல்லாஹ் திருமணத்தின் மூலம் வசதியுள்ளவராக மாற்றிவிடுகிறான்.’’ என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

இதிலிருந்து திருமணவாழ்வு அருள் நிறைந்தது என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதனால்தான் ''அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் செலவழிக்கும் ஒரு தீனார், அடிமையை விடுதலை செய்வதற்காக நீங்கள் செலவிடும் ஒரு தீனார், மனைவி மக்களுக்குச் செலவுசெய்கின்ற ஒரு தீனார் ஆகியவற்றில் உங்கள் மனைவி மக்களுக்குச் செலவு செய்கின்ற தீனாரே நன்மையிற் கூடியது.(முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள்.

இவ்வாறான கடமைகளும் பொறுப்புக்களும் கணவனுக்கே பிரதானமாக அமைகின்றது. இதனால் தான் இல்லறவாழ்வில் இணைந்தபின் ஒரு ஆண் சில நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகின்றான். எப்படியாவது உழைத்து தனது குடும்பத்தையும் மனைவி மக்களையும் காப்பாற்ற முற்படுகிறான். இதிலிருந்து உலக வாழ்வு வளம் பெறுகிறது.

மேலும் கணவன் மனைவியருக்கிடையில் பரஸ்பர அன்பு, புரிந்துணர்வு, கூட்டுப் பொறுப்பு என்பன நிலவுவதன் மூலமே குடும்பம் சீராக இயங்க முடிகின்றது. இவ்வாறு சீராக இயக்கும் பொறுப்பு கணவன் மனைவி ஆகிய இருவருக்குக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதனால்தான் "நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். உங்கள் மேய்ப்பைப் பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள். கணவன் அவன் பொறுப்புக்கள் பற்றியும், மனைவி அவளது பொறுப்புக்கள் பற்றியும் விசாரிக்கப்படுவார்கள்.'' (புகாரி, முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

கணவன் திருப்தியடைந்த நிலையில் மரணிக்கும் பெண், தான் விரும்பிய வாயிலால் சுவர்க்கம் நுழைவாள். (இப்னுமாஜா) என மனைவிக்குப் போதனை செய்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவிக்கு நல்லவரே (திர்மிதி) என கணவனுக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

மனைவி மக்களைப் பராமரிக்க வேண்டியவர் கணவனே. குழந்தைப் பராமரிப்பு, வீட்டு நிர்வாகம் போன்றவற்றை மனைவி ஏற்றுக் கொள்கிறாள். ஆண் வெளியே சென்று பொருளீட்டும்போது பெண் வீட்டிற்குள் இருந்து குடும்பம் என்ற நிறுவனத்தைக் கட்டியெழுப்புகிறாள். கணவனோடு சேர்ந்து குழந்தைகளின் சுகதுக்கங்கள், தேவைகள் முதலியவற்றை அவள் பொறுப்புடன் கவனிக்கிறாள். குடும்ப நிறுவனத்தில் இருந்து நல்ல பிள்ளைகளை உருவாக்குகின்றாள்.

உங்கள் குழந்தைகளை நீங்கள் மதித்து நடவுங்கள். அவர்களுக்கு அழகிய ஒழுக்கங்களையும், நற்பண்புகளையும் கற்றுக்கொடுங்கள். ஏனெனில், உங்கள் குழந்தைகள் அல்லாஹ் உங்களுக்களித்த அருட்கொடையாகும். (இப்னுமாஜா) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஒரு மனிதன் மரணித்துவிட்டால் அவனுடைய நற்காரியங்கள் அனைத்தும் நின்றுவிடுகின்றன. ஆனால், நிலையான தருமம், பயனுள்ள கல்வி, பெற்றோருக்காக பிரார்த்திக்கும் குழந்தைகள் ஆகிய மூன்றும் தொடர்ந்து நன்மையை ஈட்டிக் கொடுக்கின்றன. (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். குழந்தையைப் பெற்று மகிழ்வடைவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் அவர்களைச் சீராக வளர்க்கவும் வேண்டும் என்பதை இந்த ஹதீஸ் எடுத்துக் காட்டுகின்றது. ஆதலால், பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய பொறுப்புக்கள் அதிகமாக உள்ளன. நல்லதொரு பெயர் வைப்பது, நற்கல்வி புகட்டுவது, நல்லொழுக்கம் கற்பித்துக் கொடுப்பது போன்ற செயற்பாடுகள் நல்ல முஸ்லிமையும் நல்ல இஸ்லாமிய சமுதாயத்தையும் உருவாக்க வழிவகுக்கின்றன.

# வீடு

இஸ்லாம் வீட்டை மனித வாழ்வின் ஆரம்பப் பயிற்சிக்கூடமாகக் கருதுகின்றது. அதனால்தான் மனைவி மக்களுக்குக் கணவன் இருப்பிட வசதி செய்துகொடுக்க வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது.

அது அல்லாஹ்வையும் அவனது தூதுவரையும் அறிமுகம் செய்யும் இடமாக அமைய வேண்டும். ஏனெனில், குழந்தைகளின் பயிற்சிக் களமாக வீடு அமைகின்றது. அங்குதான் அது பேசக் கற்றுக் கொள்கிறது. உடலை இயக்கப் பழகுகிறது. திறன்களை வெளிப்படுத்த முயற்சிக்கின்றது. அதேசமயம் கலிமாவை மொழியவும், அல்லாஹ்வைப் புகழவும், ஸலவாத்துச் சொல்லவும், அல்-குர்ஆனை ஓதவும், நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்தவும், குடும்ப அங்கத்தவர்களுடன் பழகவும், பொருத்தமான சூழலை அமைத்துக் கொடுப்பது வீடே ஆகும்.

சிறுவர்கள் பார்ப்பதைச் செய்வார்கள், பேசுவதைக் கேட்டுப் பேசுவார்கள், வீடுகளிலுள்ள மூத்தோரின் வார்த்தைகளையும் செயற்பாடுகளையும் அவதானிக்கின்றனர். எனவே மூத்தவர்கள் மிக எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும்.

ஸலாம் கூறல், அனுமதி பெற்று வீட்டினுள் நுழைதல், எக்காரியத்தையும் பிஸ்மி கூறி ஆரம்பித்தல், மகிழ்ச்சியின்போது அல்லாஹ்வைப் புகழ்தல், குடும்பத்தினருக்கு உதவிசெய்தல், பெற்றோரை மதித்தல், அதானுக்கு மதிப்பளித்தல், சந்தர்ப்ப துஆக்களை ஓதுதல், குர்ஆன் ஆயத்தக்களை ஓதுதல், சிறிய ஸூறாக்களையும் ஹதீஸ்களையும் மனனம் செய்தல், குரலைத் தாழ்த்திப் பேசுதல், பிறர் பேசும்போது அவதானமாகக் கேட்டல், நன்றிகூறல், மரியாதை செய்தல், இரக்கம் காட்டுதல், ஏவல்களை நிறைவேற்றுதல், நேரத்திற்கு கடமைகளைச் செய்தல், பொருட்களை உரிய இடத்தில் வைத்தல், சுத்தம் பேணுதல், பிறரை மதித்தல், ஒற்றுமையாய் வாழுதல், இனிய வார்த்தைகளைப் பேசுதல், நற்செயலுக்கு வலக்கரத்தைப் பயன்படுத்தல் போன்ற நற்பழக்கங்களைப் பழக்குவதற்கு வீடே தக்க களமாக அமைகின்றது.

வீட்டை அதன் உள்ளும் புறமும் சுத்தமாகவும், அழகாகவும், ஒழுங்காகவும் இதமாகவும், அமைதியாகவும் வைத்திருத்தல் இஸ்லாத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளதாகும்.

அல்லாஹ் உங்கள் வீடுகளை உங்களுக்கு அமைதியளிக்கும் இடமாக அமைத்துள்ளான் (16:80) என்று அல்-குர்ஆன் குறிப்பிடுகின்றது.

உங்கள் வீடுகளை மண்ணறைகளாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்? (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள். ஆதலால், வீடுகளில் தொழுகை, திக்ர், திலாவத் போன்றன இடம் பெற வேண்டும்.

வீட்டில் தொழுவதற்கெனத் தனியிடம் ஒதுக்குதல், திரைகளைப் பயன்படுத்துதல், இஸ்லாம் வெறுத்தொதுக்கும் காட்சிகள், கேள்விகள், நுகர்வுகள் இடம்பெறாமல் காத்தல் போன்றன அல்லாஹ்வின் அருள் கிடைக்கச் செய்வனவாகும்.

சமூகத்தில் நன்மைகளை உருவாக்கி இஸ்லாமிய கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின், தாய்மார்கள் வீட்டிலிருந்து தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமென இஸ்லாம் கேட்டுக்கொள்கின்றது.

## செயற்பாடுகள்

சுருக்கமாக விடை தருக.

1. உலக வாழ்க்கை இயக்கம் பெறுவதற்காக அல்லாஹ் படைப்புக்களை எவ்வாறு சிருஷ்டித்துள்ளான்?
2. இஸ்லாம் ஆண் - பெண் தொடர்பை எவ்வாறு கண்ணியப்படுத்தியுள்ளது?
3. கணவன், மனைவியின் கடமைகளை அட்டவணைப்படுத்துக?
4. திருமண வாழ்வு அருள் நிறைந்தது இதனை எவ்வாறு உணர்ந்து கொள்ளலாம்?
5. உலக வாழ்வு எவ்வாறு வளம் பெறுகிறது?
6. கணவன், மனைவி பொறுப்புக்கள் பற்றிய ஹதிஸ்களை எழுதுக?
7. தாய், தந்தையர் மூலம் பிள்ளைகள் பெறக்கூடிய பயன்கள் ஐந்தினை எழுதுக?
8. குடும்பங்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளைத் தடுப்பதற்கு எவ்வாறான வழிமுறைகளைக் கையாளலாம் என விபரிக்குக.
9. திருமணத்தின் மூலம் பெறும் உயர்வைப் பற்றி அல்-குர்ஆன் எவ்வாறு சிலாகித்து கூறுகின்றது?
10. இஸ்லாமிய வீடு என்பதற்கு நீர் எவ்வாறு விளக்கமளிப்பீர்?

# குடும்பப் பரிபாலனம்

கணவன், மனைவி மத்தியில் இல்லறவாழ்க்கை சீராக அமைய வேண்டுமானால் இரு பிரிவினரும் தத்தமது கடமைகளை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

அல்லாஹ்தஆலா அல்குர்ஆனில் ‘‘கணவன், மனைவிக்கு ஆடையாகவும், மனைவி கணவனுக்கு ஆடையாகவும் உள்ளனர்’’ (2:187) எனக் கூறுகின்றான்.

‘‘பெண்களுக்கு ஆண்கள் புரிய வேண்டிய கடமைகளைப் போன்று ஆண்களுக்குப் பெண்கள் புரிய வேண்டிய கடமைகளும் உண்டு’’. (2:228) என்றும், அல்-குர்ஆன் பெண்களின் உரிமைகளைப் பொதுவாகக் கூறியுள்ளது. எனினும் குடும்பத்தை நிருவகிக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஆண்கள் மீது இருப்பதால் அவர்களின் உரிமைகளை இஸ்லாம் சற்று மேலாக வழங்கியுள்ளது.

மேலும் இஸ்லாம் குடும்பத்தின் தலைமைத்துவம் ஆணின் கையிலேயே இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றது. ஏனெனில் ஒரு பெண்ணின் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பம் சீரான நிலையைப் பெறுவதற்குப் பதிலாக பல சீர்கேடுகளையும், சிக்கல்களையும் எதிர்நோக்கும். இக்கருத்திலேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘‘ஒரு பெண்ணின் தலைமைத்துவத்தைக் கொண்ட சமூகம் ஒரு போதும் வெற்றி பெறமாட்டாது’’ எனக் கூறியுள்ளார்கள். உடல் வலிமையும், திறனும், நிருவாக ஆற்றலும் ஆணிடமே உண்டு என்பதனால் அவனே குடும்பத் தலைமைத்துவத்திற்குப் பொருத்தமான வனாகின்றான்.

திருமண உடன்படிக்கையில் கணவன், மனைவிக்கு வழங்க வேண்டிய மஹரை இஸ்லாம் ஒரு ஷர்த்தாக ஆக்கியிருப்பது குடும்பவாழ்க்கையில் ஆணின் தலைமைத்துவத்தை நிச்சயிப்பதற்கும், குடும்பத்தைப் பாதுகாப்பதில் ஆணின் பொருளாதாரத்தில் பலத்தை நிரூபிப்பதற்குமேயாகும்.


இலவச விநியோகத்திற்காக

ஒரு கணவன் தனது மனைவியோடு எப்போதும் பிணக்கு இல்லாமல் நேசத்தோடு வாழ நபியவர்கள் பின்வருமாறு உபதேசிக்கிறார்கள். ''நீங்கள் மனைவிகளிடம் ஏதேனும் தீய குணங்களைக் கண்டால், உடனே அவர்களை வெறுத்து விடாதீர்கள். நீங்கள் நன்கு கவனிப்பீர்களாயின் அவர்களிடம் வேறு நல்ல குணங்களைக் காண்பீர்கள்'' (முஸ்லிம்)

ஆண்களே குடும்பத்தின் தலைவராவர். ஆண்கள் பெண்களின் நிருவாகிகள் என்றும் ஆண்களே பெண்களுக்காகச் செலவிட வேண்டுமென்றும் அல்-குர்ஆன் சுட்டிக் காட்டியுள்ளது. கணவன் தன் மனைவிக்குரிய உணவு, உடை, உறையுள் போன்ற அன்றாட தேவைகளைக் கொடுத்து அவனது கடமைகளை நிறைவேற்றுவது போல மனைவி கணவனோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் கணவனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றியும் இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். பெண்கள் தமது கணவன்மார்களுக்கு பணிவுள்ளவர்களாகவும், அவர்களின் பொருட்களைப் பாதுகாப்பவர்களாகவும், அவர்கள் வீட்டில் இல்லாத போது தனது கற்பைப் பேணுபவர்களாகவும் இருக்க வேண்டும். இத்தகைய பெண்ணையே நபியவர்கள்

''உலகபொருட்கள் அனைத்தும் இன்பம் அளிக்கக்கூடியவைகளாகும், ஒரு நல்ல மனைவியே அத்தகைய உலக இன்பப்பொருட்களில் மிக சிறந்ததாகும்'' எனவும், ''நல்லொழுக்கமுள்ள பெண்ணே ஒருமனிதனின் மேலான பொக்கிஷம்''. எனவும் கூறியுள்ளார்கள்.

கணவனின் அந்தஸ்தை மனைவி எவ்வாறு பேணவேண்டும் என்பதைப்பற்றிக் குறிப்பிட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு மொழிந்தார்கள். ''இறைவனுக்கு அடுத்தபடியாக வேறு ஒருவனுக்கு ஸஜதா செய்ய நான் ஏவுவதாயின் பெண்கள் தமது கணவன்மார்களுக்கு ஸஜதா செய்யுமாறு ஏவியிருப்பேன்'' என்றார்கள். ஆகவே குடும்ப பரிபாலனத்திற்கு சிறந்தவர்கள் ஆண்கள் என வலுயுறுத்தப்பட்டுள்ளது.

## பெற்றோர் பிள்ளைகள்

அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள செல்வங்களில் பிள்ளைச் செல்வம் அல்லாஹ்வின் ஒரு மகத்தான அருளாகும். எனவே இந்த அருளை அவன் நல்ல முறையில் பயன்படுத்துவது அவசியமாகும். பெற்றோர் தமது பிள்ளைகளை இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் வளர்ப்பதன் மூலமே அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்க முடியும். பிள்ளைகளுக்கு உணவு, உடை, உறையுள் போன்ற அவசியத் தேவைகளை வழங்கி அவர்களின் பௌதிக வளர்ச்சியில் மாத்திரம் கரிசனை காட்டுமாறு இஸ்லாம் இயம்பவில்லை. மாறாக அத்தகைய தேவைகளை ஈடுசெய்வதோடு பெற்றோர் தமது பிள்ளைகளின் சன்மார்க்கத் தேவைகளையும் ஈடுசெய்ய வேண்டும். மார்க்கக் கடமைகளை அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதும் பெற்றோரின் கடமையாகும்.

ஏனெனில் சன்மார்க்க போதனைகள் மூலமே பிள்ளைகள் ஈருலகிலும் ஈடேற்றம் பெறுவர். இதையே அல்லாஹ் ''விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தார்களையும் நரகிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்'' எனக்கூறுகிறான்.

*பெற்றார் தமது பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் கற்பிப்பதன் அவசியத்தை நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள். ''ஒரு தந்தை தன் குழந்தைக்கு ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுப்பது ஒரு குவியல் தங்கத்தை தர்மம் செய்வதை விடச் சிறந்ததாகும். (திர்மிதி)*

பெற்றோர்கள் தமக்குப் பின்னால் தமது பிள்ளைகள் சீராக வாழவேண்டும் என்பதற்காக உலக சொத்துக்களை அதிகமாகத் திரட்டவும் அவற்றைத் தமது பிள்ளைகளுக்கு வாரிசுச்சொத்தாக விட்டுச் செல்லவும் விரும்புவர். ஆனால் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு விட்டுச்செல்லும் சிறந்த சொத்து அப்பிள்ளைகளுக்கு நல்லொழுக்கப் போதனைகளைக் கற்றுக் கொடுப்பதாகும். ஒரு தந்தை ஒழுக்கக் கல்வி போதிப்பதை விட மேலான ஒரு கொடையை தன் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்ல முடியாது. அதனால்தான் ''ஒரு தந்தை தன் பிள்ளைக்கு நல்லொழுக்கத்தை விட சிறந்ததொரு அணிகலனை கொடுப்பதற்கு இல்லை''. (அல் - ஹதீஸ்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

பெற்றோர் குடும்பத்தலைவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் பிள்ளைகளை வளர்த்த முறை பற்றி மறுமையில் அவர்கள் விசாரிக்கப்படுவர். என்பது இப்னுஉமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கருத்தாகும். எனவேதான்

''பிள்ளைகளுக்கு ஒழுக்கம் போதிக்கும் நோக்கத்தில் வீட்டுச்சுவரில் பிரம்பை தொங்கவிட்ட மனிதனுக்கு அல்லாஹ் அருள்பாளிப்பானாக என நபியவர்கள் பிரார்த்தித்துள்ளார்கள்''. மேலும் பெண்பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்க்கும் விடயத்தில் நபியவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்.

''மூன்று பெண்பிள்ளைகளைப் பெற்ற ஒரு தகப்பன் அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்ப்பானாயின், அவன் சுவர்க்கம் புகுவான்.'' என்பது நபிமொழியாகும்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்,

கேளுங்கள்! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவரும், கண்காணிப்பவருமாவர். உங்களுக்குக் கீழ் உள்ள பொறுப்புக்கள் குறித்து நீங்கள் வினவப்படுவீர்கள். (புகாரி, முஸ்லிம்)

ஒரு மனிதனின் பொறுப்பிலும் கண்காணிப்பிலும் ஏதேனும் பொருட்களோ மக்களோ ஒப்படைக்கப்பட்டிருந்தால் அவை குறித்து அவர்களின் கடமையை சரிவர நிறைவேற்றினாயா இல்லையா? அமானிதத்தில் (அடைக்கலப்பொருளில்) நம்பிக்கைத் துரோகம் ஏன் செய்தாய்? குழந்தைகளை சீர்திருத்தி ஒழுக்கம் கற்றுக்கொடுக்க முயற்சி செய்தாயா? இல்லையா என்றெல்லாம் மறுமை நாளில் வினவப்படும் என இதிலிருந்து தெரிய வருகிறது. முஃமின்களின் தலைவராக மதிக்கப்படும் அமீரும், ஆட்சியாளரும் கூட அவர்களுடைய குடிமக்களைப்பற்றி இவ்வாறே வினவப்படுவர். இதே போன்றுதான் எஜமானின் பொருளையும் சொத்தையும் எவ்வாறு பாதுகாத்தாய் என்று ஓர் அடிமையிடம் கேட்கப்படும். இவ்வாறே ஒவ்வொரு மனிதனும், தனது குழந்தைகள் குடும்பத்தார் ஆகியோர் குறித்துக் கேள்வி கேட்கப்படுவர். இதே போன்றே ஒரு பெண் தனது குழந்தைகள் கணவனின் பொருள்கள் குறித்து வினவப்படுவாள்.

அல்லாஹ்தஆலா இவ்வுலகில் ஒருவருக்கு எவ்வாறான அருட்கொடைகளைக் கொடுத்துள்ளானோ அவ்வருட்கொடைகளைப் பற்றி வினவப்படுவார்.

ஆகவே அல்லாஹ்வின் அருட்கொடைகளை, இம்மையிலும் மறுமையிலும் பெறுவதற்கு நல்லொழுக்கமுள்ளவர்களாகக் குழந்தைகளை வளர்ப்பது பெற்றோரின் தலையாய கடமையாகும்.

## செயற்பாடுகள்

சுருக்கமாக விடை தருக.

1. குடும்பப்பரிபாலனம் தொடர்பில் இஸ்லாம் கூறும் அறிவுரைகளைத் தருக?

2. கணவன், மனைவியுடன் நேசத்துடன் வாழ்வதைப் பற்றிக் கூறும் அல்குர்ஆன் வசனம் ஒன்றைத்தருக?

3. கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை அட்டவணைப்படுத்துக?

4. பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் யாவை?

## 4.2 பெண் உரிமை

இஸ்லாம் மனிதவாழ்கையைப் பல்வேறு கோணங்களில் சீர்படுத்தி இருக்கிறது. இந்த வகையில் ஜாஹிலிய்யாக் காலத்தில் தமது அந்தஸ்து, உரிமைகளை இழந்திருந்த பெண்களுக்கு சமூக அந்தஸ்துக்களையும், உரிமைகளையும் வழங்கி கௌரவித்துள்ளது.

உலகுக்கு வழிக்காட்ட வந்த நபிமார்களையும், உத்தமர்களையும் ஈன்றெடுத்தவர்கள் பெண்களாவார். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவத்தை முதலில் ஏற்றுக் கொண்டு ஆறுதல் கூறி தைரியமூட்டியவர் அவர்களின் மனைவி அன்னை ஹதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களே! மேலும் இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாத்திற்கு உயிர் தியாகம் செய்த பெண்களையும் நாம் காணலாம். இந்த வகையில் அன்னை ஸுமையா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் முதல் தியாகியாகக் கருதப்படுகிறார்கள். இஸ்லாமிய யுத்தங்களில் கூடப் பெண்கள் முஸ்லிம் வீரர்களுக்குப் பணியாற்றக் கூடியவர்களாகவும் காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடியவர்களாகவும் காணப்பட்டுள்ளார்கள். இவற்றிலிருந்து பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பது தெளிவாகின்றது.

இஸ்லாம் பெண்களின் சுதந்திரத்தையும், உரிமையையும் அடக்கி ஒடுக்க வந்த மார்க்கம் அல்ல. அது பெண்களைப் பல்வேறு விடயங்களில், ஆண்களுக்கு நிகராக வைத்து நோக்கியுள்ளது. வேறு சில விடயங்களில் பெண்களின் உள, உடல் ரீதியான பலவீனங்களைக் கருத்திற்கொண்டு அவர்களின் கடமைகளையும், உரிமைகளையும் கட்டுப்படுத்தியுள்ளது.

*இஸ்லாம், பெண்ணையும், ஆணைப் போன்ற ஒரு மனிதப் பிறவியாகவே கருதுகின்றது. ஆணுக்குப் போன்றே பெண்ணுக்கும் ஆத்மா உண்டு. இதை அல்-குர்ஆன் ''அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான்'' (4:1) எனக் கூறுகிறது. இவ்வசனம் பெண்ணுக்கு ஆத்மா உண்டா எனத்தர்க்கித்த கிரேக்க ஞானிகளின் கருத்துக்களைப் பொய்ப்படுத்தியது.*

ஆண்களைப் போலவே பெண்களுக்கும் உயிர், உடமை, மானம் போன்றவற்றையும் உரிமையையும், உத்தரவாதத்தையும் இஸ்லாம் வழங்கியுள்ளது. அவள் கண்ணியமானவள் அவளுக்கு மானம் உண்டு. அவள் மீது அவதூறு சொல்லுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. அவள் மீது அவதூறு சொன்னவர்கள் அதை நிரூபிக்க நான்கு சாட்சிகள் கொண்டு வராவிட்டால் கடும் தண்டனைக்கு ஆளாகுவார்கள் என்பதைப் பின்வரும் அல்-குர்ஆன் வசனம் விளக்குகிறது.

***''யாரேனும் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி அதற்கு வேண்டிய நான்கு சாட்சிகளைக் கொண்டு வராவிட்டால் அவனை நீங்கள் 80 கசையடி கொடுத்துத் தண்டியுங்கள். பின்னர் அவனது சாட்சியத்தை ஒரு போதும் ஏற்காதீர்கள்''. (24:4)***

மேலும் நபியவர்கள் பெண்களின் மதிப்பையும், அந்தஸ்தையும், உயர்வுபடுத்துவதற்காக ''தாய்மார்களின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் உள்ளது'' எனக் கூறினார்கள். மேலும் ''எவர் தனது மனைவியிடத்தில் கண்ணியமாக நடந்து கொள்கின்றாரோ அவரே உங்களில் சிறந்தவராவார்'' என்றும் நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

நபியவர்கள் தமது இறுதி ஹஜ் உபதேசத்தின்போது பெண்களைப் பற்றி விசேடமாகக் குறிப்பிட்டார்கள். அவர்களை நல்லமுறையில் நடாத்துமாறும் அவர்களை கண்டிப்பதில் மிருதுவாக நடக்குமாறும் அவர்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அல்லாஹ்வின் அமானிதச் சொத்துக்கள் என்றும் ஆண்களுக்குப் பெண்கள் மீது உரிமை இருப்பது போல் பெண்களுக்கும் ஆண்கள் மீது சில உரிமைகள் உண்டு என்றும் குறிப்பிட்டார்கள்.

மறுமையில் மனிதன் பெறுகின்ற உலக விவகாரங்களுக்கான நற்கூலி அல்லது தண்டனை இரண்டிலும் ஆண், பெண் இருபாலரும் சமனானவர்களே. இவ்விடயத்தில் யாருக்கும் விசேட சலுகை கிடையாது. இதனை அல்-குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது.

***''உங்களில் ஆண், பெண் இரு பாலரிலும் யார் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நாம் அதனை வீணாக்க மாட்டோம். உங்களில் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர்தான் ஆகவே கூலி கொடுப்பதில் பாகுபாடு இல்லை'' (அல் - குர்ஆன்)***

அவ்வாறே உழைக்கவும், சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும் அவற்றைத் தாம் விரும்பியபடி கையாளவும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை உண்டு. இதனை அல்-குர்ஆன் ''ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியன அதே போல் பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவை அவர்களுக்குரியன'' எனக் கூறுகின்றது. (4:32)

மேலும் தன் தாய் தந்தையர், கணவர், சகோதரர் ஆகியோரின் சொத்துக்களுக்கும் அனந்தரத்திற்கும் உரிமை உண்டு. ஆண்களைப் போல் தொழில் செய்யும் உரிமை, பேசுகின்ற உரிமை, எழுதுகின்ற உரிமை, சுதந்திரமாக வாழுகின்ற உரிமை, திருமணம் முடிப்பதற்கான உரிமை முதலிய பல உரிமைகள் வழங்கப்பட்டதோடு, குடும்பபரிபாலனம், இல்லற வாழ்க்கை முதலிய விடயங்களில் பெண்களுக்குரிய சிரமங்கள், பிரச்சினைகள் அகற்றப்பட்டுள்ளன.

'அறிவைத் தேடுவது முஸ்லிமாகிய ஆண்,பெண் அனைவரினதும் கடமை'' என்ற நபி ஸல்லல்லாஹுஃ அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழி மூலம் கல்வி விடயத்தில் ஆண்களுக்குரிய சம உரிமையை பெண்களுக்கும் இஸ்லாம் வழங்கியுள்ளது என்பது தெளிவாகின்றது.

''ஆணும், பெண்ணும் மனித இனத்தில் ஒரேமாதிரியான இரு பாகங்களாகும்.'' என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள். உடலை போர்த்திக்கொள்ளும் ஆடை, ஒருவருக்கு அபயமும், பாதுகாப்பும், வசீகரமும், அழகும் தருவது போல பெண்களுக்கு ஆண்கள் பாதுகாப்பாகவும் வசிகரமாகவும் இருக்க வேண்டுமென்று அல்-குர்ஆன் கட்டளை இடுகிறது. (2:187)

இவை தவிர ஒரு பெண்ணுடைய வாழ்க்கையில் மிக முக்கிய விடயமான திருமண விடயத்தில் பல சந்தர்ப்பங்களில் பெண்ணின் அனுமதியின்றி திருமணம் செய்து கொடுப்பதை இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை. தன்னை விடுவித்துக் கொள்ள அப்பெண்ணுக்கு உரிமை உண்டு. மேலும் ஆன்மீக ரிதியிலும் ஆண்களைப் போல பெண்களும் இறைவழிபாட்டின் மூலம் உயர்ந்த நிலையை அடைய இஸ்லாம் வழிவகுத்துள்ளது.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் இஸ்லாத்தில் சம அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளது. எனினும் சில பொறுப்பான விடயங்களில் பெண்களை விட ஆணுக்கே முன்னுரிமை வழங்கப்பட்ள்ளது. பெண்களின் இயல்பான உடல், உள, ரீதியான பலவீனமே இதற்குக் கார ணமாகும். ஆகவே இஸ்லாம் தந்த உரிமைகளை சிறந்த முறையில் பயன்படுத்தி சிறந்த இஸ்லாமியப் பெண் சமுதாயத்தை உருவாக்கவேண்டும்.

## செயற்பாடு

சுருக்கமான விடை தருக

1. இஸ்லாம் பெண்களை எவ்வாறு கௌரவப்படுத்துகிறது?
2. பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என ஏன் குறிப்பிடப்படுகிறது?
3. பெண்களுக்குரிய உரிமைகளைத் தொகுத்தெழுதுக.
4. ‘‘அவதூறு’’ பற்றிக் கூறும் குர்ஆன் வசனமொன்று தருக. அவதூறுக்கான இஸ்லாமியத் தண்டனை என்ன?
5. பெண் இனத்தை உயர்வுபடுத்தும் ஹதீஸ்களைத் தொகுத்து எழுதுக?
6. இஸ்லாம் பெண்களுக்கு அந்தஸ்து வழங்கினாலும், ஆண்களைவிடப் பெண்களுக்குக் குறைந்த உரிமைகளையே வழங்கியுள்ளது? காரணம் என்ன?



இலவச விநியோகத்திற்காக

## 4.3 உணவும் உடையும்

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. இவ்வுணவைத் தேடிக் கொள்வதற்கு இஸ்லாம் பல நிபந்தனைகளையும், சட்டதிட்டங்களையும் வகுத்துள்ளது. ஏனைய விடயங்களில் போன்று உணவு விடயத்திலும் ஹலால், ஹராம் வகுக்கப்பட்டுள்ளது. மனிதன் தனது உயிருக்கோ, உடலுக்கோ, அறிவுக்கோ, ஆன்மாவுக்கோ, தீங்கு விளைவிக்கக்கூடிய எதனையும் உண்ணவோ, பருகவோ கூடாது.

எச்சந்தர்ப்பத்திலும் ஒரு முஸ்லிம் தனது உடம்பினுள் ஹரமான உணவுகளை உட்கொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் இது பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''ஹராமான உணவை உட்கொண்ட எந்த உடம்பும் சுவனம் நுழையாது அதற்குத் தகுதியான இடம் நரகம் தான்'' (திர்மிதி) என கூறினார்கள் ஹலாலான உணவுகளை உட்கொள்வது இபாதத் ஆகும்.

*''மனிதர்களே பூமியிலுள்ளவற்றில் (புசிக்க உங்களுக்கு) அனுமதிக்கப்பட்ட பரிசுத்தமானவற்றையே புசியுங்கள். சைத்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றாதீர்கள்'' (2:172) என்றும் ''விசுவாசிகளே நாம் உங்களுக்கு அளித்தவற்றுள் பரிசுத்தமானவற்றையே புசியுங்கள்'' (2:172) என்றும் அல்-குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.*

பரந்த பூமியில் பரவிக்கிடக்கின்ற ஹலாலான உணவையே தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும். நாங்கள் அன்றாடம் பிரதானமாக மூன்று இடங்களிலிருந்து உணவைப் பெற்றுக் கொள்கிறோம்.







1. நிலத்தின் பகுதிகளில் இருந்து உப்பு, மண், கனிப்பொருட்கள், தங்கம், வெள்ளி, உலோகப் பொருட்கள் போன்றவைகள் எடுக்கப்படுகின்றன. இவையனைத்தும் மனிதனது உயிருக்கோ, உடலுக்கோ, சிந்தனைக்கோ தீங்கு விளைவிக்காமல் இருப்பின் அவையாவும் ஹலாலாகும்.
2. தாவரங்களின் பகுதிகளிலும் உடல் நலத்துக்கும், உயிருக்கும், சிந்தனைக்கும் தீங்கு விளைவிக்காதவை அனைத்தும் ஹலாலாகும். புத்தியை மயக்கி, போதை தரக்கூடிய உணவுகளை உட்கொள்வதோ, அவற்றின் உற்பத்தியில் ஈடுபடுவதோ, அவ்வுற்பத்திக்காகத் தனது நிலங்களை குத்தகைக்கு விடுவதோ இஸ்லாமிய சட்டத்தின்படி ஹராமாகும்.
3. பிராணிகள் மூலம் கிடைக்கும் உணவுகளை நோக்கும் போது, இவற்றில் கடலில் வாழுகின்ற சகல பிராணிகளும் மனிதனுக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளது. மேலும் பாம்பு, தவளை, முதலை என்பவற்றை உண்பது ஹராமாகும். மீனினங்களையும், வெட்டுக்கிளியையும் இஸ்லாமிய முறைப்படி அறுக்காமல் உண்பது ஆகுமாக்கப்பட்டுள்ளது. தரையில் வாழும் இனங்களில் ஆடு, மாடு, ஒட்டகம், மான், குதிரை, மரை, முயல், உடும்பு, கோழி, புறா, வாத்து போன்ற உயிரினங்களை இஸ்லாமிய முறைப்படி அறுத்து உண்பது ஹலாலாகும்.

## உண்பதற்குத் தடைசெய்யப்பட்ட உணவுகள்

1. நஜிஸ்
2. அருவருக்கத்தக்கவை (சளி, பூச்சி, புழு)
3. இரத்தம்
4. நகத்தால் பிராணிகளை வேட்டையாடக்கூடிய பறவைகள் (இராஜாளி, கழுகு)
5. வீரப்பற்களால் இரையைப் பற்றி எடுக்கும் பிராணிகள் (புலி, சிங்கம், குரங்கு, பூனை)
6. கொல்லக்கூடாது எனத் தடுக்கப்பட்ட பிராணிகள் (தேனீ, தவளை)
7. கொல்லும்படி ஏவப்பட்ட பிராணிகள் (பாம்பு, பல்லி, தேள்)
8. ஒட்டகைகளையும், குதிரைகளையும் தவிர ஏறிச்சவாரி செய்யும் விலங்குகள்
9. நரமாமிசம்
10. முறைப்படி அறுக்கப்படாமல் செத்தவை.

போன்ற உணவுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எமது துஆக்கள் அங்கீகரிக்கப்படவும், எமது செயற்பாடுகள் அனைத்தும் அங்கிகரிக்கப்படவும் காரணமாக அமைகின்ற ஹலாலான உணவையே உட்கொள்ள வேண்டும்.

உணவு உண்ணும் போது இஸ்லாமிய ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் எமது செயற்பாடுகள் இபாதத்தாக அமையும்.

கூர்மையான ஆயுதம் மூலமாக அல்லது வேட்டை நாய் மூலமாகப் பிராணிகளை வேட்டையாடும் போது வேட்டையாடப்பட்ட பிராணியின் உயிர் பிரியும் முன் தப்ஹு செய்வது கடமையாகும். (தப்ஹு = அறுத்தல்)

அல்லாஹ்வின் பெயர் கூறி எறியப்பட்ட ஆயுதத்தின் கூர்முனை தாக்கி தப்ஹ் செய்யும் முன் உயிர் பிரிந்து விட்டால் அதனைச் சாப்பிடுவதில் தவறில்லை. ஆனால் ஆயுதத்தின் கூர்முனையின்றி அதன் மறுபகுதியால் தாக்கப்பட்டு அறுக்க முன்னரே இறந்துவிடுமாயின் அதனைச் சாப்பிடுவது ஹராமாகும். கடலில் வாழுகின்ற சகல பிராணிகளும் மனிதனுக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளது. மேலும் பாம்பு, தவளை, முதலை என்பவற்றை உண்பது ஹராமாகும்.

## உடையும் அணிகலன்களும்

இஸ்லாமிய உடை ஒரு முஸ்லிமுடைய ''அவ்றத்'' என்னும் கட்டாயம் மறைக்க வேண்டிய பகுதியை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆண்கள், தங்கள் தொப்புழுக்கும், முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதியையும் பெண்களைப் பொறுத்தவரை இரு கைகளின் மணிக்கட்டு வரையுள்ள பகுதிகளையும், முகத்தையும் தவிரவுள்ள உடலின் சகல உறுப்புக்களையும் மறைத்துக் கொள்ள வேண்டும்.

''அல்லாஹ் அழகானவன். அவன் அழகையே விரும்புகின்றான்'' (முஸ்லிம்) எனக் கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''அல்லாஹ் வெட்கமுள்ளவன். அவன் வெட்கமுள்ளவனையே விரும்புகின்றான்'' (அபூதாவூத்) என்றும் கூறியுள்ளார்கள். ஆகவே இந்த ஹதீஸ்களைக் கருத்திற்கொண்டு எமது ஆடை அணிகளை அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

பெண்களின் அவ்றத்தைப்பற்றி அல்-குர்ஆனில் குறிப்பிடும் போது ''நபியே விசுவாசங் கொண்ட பெண்களுக்கு நீர் கூறும் அவர்கள் தங்களின் பார்வையைக் கீழ்நோக்கியே வைத்து, தங்கள் கற்பையும் பாதுகாத்துக்கொள்ளவும் அன்றி தங்கள் தேகத்தில் பெரும்பாலும் வெளியே தெரியக்கூடியவைகளைத் தவிர தங்கள் அழகையும் ஆடை, ஆபரணம் போன்ற அலங்காரத்தையும் வெளிக்காட்டாது மறைத்துக்கொள்ளவும்.

ஆண்கள் ஆடைகளைக் கணுக்காலுக்குக் கீழ் தொங்கவிட்டு அணிதல் கூடாது. பெண்கள் தம் பாதங்கள் மறையும் அளவு ஆடைகளைத் தொங்கவிட்டு அணியலாம். எவ்வித ஆடை அவையாயினும் அங்கத்தை மறைப்பதாகவே அமைய வேண்டும். பட்டாடைகள் ஆண்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளன. பெண்களுக்குப் பட்டாடை தடைசெய்யப்படவில்லை. கனமான (தடித்த) ஆடைகளை ஆண்களும், பெண்களும் அணிவதையே இஸ்லாம் விரும்புகிறது. நடை, உடை, பேச்சு இவைகளில் பெண்கள் ஆண்களுக்கும், ஆண்கள் பெண்களுக்கும் ஒப்பாவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் உடலை வெளிக் காட்டக்கூடிய மெல்லிய இறுக்கமான ஆடைகளை அணிவதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது.

அணிகலன்களைப் பொறுத்தவரை இருபாலரும் பாதணி அணிவதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. அதிலும் நஜிஸான மூலப்பொருட்களால் செய்யப்பட்டவை தவிர்க்கப்படுதல் வேண்டும். பெண்கள் நகைகள் அணியலாம். அவை எந்த உலோகத்திலும் அமையலாம்.

ஆனால் ஆண்களுக்குத் தங்கம் ஹராமக்கப்பட்டுள்ளது. ஆண்கள் விரும்பினால் வெள்ளியால் செய்த மோதிரத்தை மாத்திரம் சின்ன விரலில் அணிந்து கொள்ள முடியும். தங்கம், வெள்ளியினாலான பாத்திரங்களோ, பல்குத்திகளோ, காது குடையும் கருவிகளோ பாவிப்பது ஆண், பெண் இருபாலருக்கும் தடைசெய்யப்பட்டுள்ளது.

மேலும், தண்ணீர் உட்புகாத பூச்சுப் பொருட்களினால் தன்னை அலங்கரித்தல், செயற்கை முடி சேர்த்தல் ஆகியவைகள் இருபாலாருக்கும் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனால் பெண்களுக்கு மருதோன்றிச் சாயமிட்டுக்கொள்வதற்கு அனுமதி உண்டு. ஆண்களுக்கு தாடியில் மருதோன்றிச்சாயமிட அனுமதி உண்டு. அலங்காரத்தை பெண்கள் அந்நிய ஆண்களுக்கு காட்டுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

*‘‘ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக்கூடிய ஆடைகளையும், அலங்காரத்தையும் நிச்சயமாக நாம் உங்களுக்கு அருள் புரிந்திருக்கிறோம். எனினும் (பாவங்களை மறைத்துவிடக்கூடிய பயபக்தி எனும்) பரிசுத்தத் தன்மையான ஆடை தான் மிக மேலானது. இதுவும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளதாகும். இதனைக் கொண்டு அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவார்கள்.’’ (7:26)*

அனுமதிக்கப்பட்ட ஆடை அணிகளை அணியும் போது வலப்பக்கமாக ஆரம்பிக்க வேண்டும். அணியும் போது இஸ்லாமிய முறைகளை பின்பற்றுவதோடு,

- اللَّهُمَّ لَكَ الْحَمْدُ أَنْتَ كَسَوْتَنِيهِ، أَسْأَلُكَ مِنْ خَيْرِهِ وَخَيْرِ مَا صُنِعَ لَهُ، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّهِ وَشَرِّ مَا صُنِعَ لَهُ»

“யா அல்லாஹ் உனக்கே எல்லாப் புகழும். நீதான் இதை எனக்கு அணியத் தந்தாய். இதன் நன்மையையும் இது எதற்காகச் செய்யப்பட்டதோ அதன் நன்மையையும் தரும்படி வேண்டுகிறேன். இதன் தீமையை விட்டும் இது எதற்காக செய்யப்பட்டதோ அதன் தீமையை விட்டும் பாதுகாவல் தேடுகின்றேன்’’ என்ற துஆவை ஓத வேண்டும்.

தற்காலத்தில் மக்கள் ஹராம், ஹலால் என்பதை கவனிக்காமலேயே உணவையும் உண்ணுகிறார்கள். ஆடை அணிகலன்களையும் அணிகிறார்கள். ஆண்கள் பெண்களைப் போலவும், பெண்கள் ஆண்களைப் போலவும் அணிந்து அரை நிர்வாணமான முறையில் காட்சியளிப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

அன்பான மாணவர்களே! நீங்கள் உங்களுடைய சகோதர சகோதரிகளைக் கவனித்துக் கொள்ளுங்கள். அவர்களும் இஸ்லாமியப் பிள்ளைகளாக வளர வேண்டும். அப்போது தான் அல்லாஹ்வின் அன்பும் அருளும் கிடைக்கும்.

ஆகவே, இஸ்லாம் கூறியுள்ள பிரகாரம் அது அனுமதிக்கின்ற ஆடை அணிகளை அணிவோம். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவோம்.

## செயற்பாடுகள்

**பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**
(சுவர்க்கம், நரகமே, பிரார்த்தனை, பிஸ்மில், போதை, கைகளையும், அலங்கரிக்க, மோதிரத்தை, அவ்றத்தை)

1. ஹலாலான உடைகளை உபயோகிக்கும்போது தான் எமது ........கள் அங்கீகரிக் கப்படுகின்றன.
2 நபி(ஸல்) அவர்கள் ஹராமை உட்கொண்ட எந்த உடலும் .......... நுழையாது அதற்கு ........தகுதியான இடம் என்று கூறியுள்ளார்கள்.
3. புத்தியை பேதலிக்கச் செய்தாலும் செய்யாவிட்டாலும். ............. பொருள்களை உட்கொள்வது ஹராமாகும்.
4. உணவை உண்பதற்கு முன் இரு ................. வாயையும் கழுவிக்கொள்ள வேண்டும்.
5. உண்ண ஆரம்பிக்கும்போது............சொல்வது ஸுன்னத்தாகும்.
6. ஆண்,பெண் இருபாலாரும்...................மறைக்கக்கூடிய உடைகளை அணிவது கட்டாயமாகும்.
7. ஆண்கள் ஒரேயொரு வெள்ளி.....................ச்சின்ன விரலில் அணிவது ஸுன்னத்தாகும்.
8. வீட்டை, வெள்ளி, தங்கத்தினால்............... கூடாது.

**சுருக்கமாக விடை தருக.**

1. தப்ஹு செய்யாமல் உண்பதற்கு அனுமதிக்கப்பட்டவைகள் எவை?
2. ஹராமான உணவை உண்பது எதற்கு ஒப்பாகும்?
3. இயல்பால் ஹராமானஉணவுப் பொருட்களைக் குறிப்பிடுக.
4. ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்ட ஆடைஅணிகள் எவை?
5. அவ்றத் என்றால் என்ன? ஆண், பெண்களின் அவ்றத்துகளைக் குறிப்பிடுக.

## 4.4 பெற்றோரை மதிப்போம்

பிள்ளைகள் தம் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் அவர்களுடன் நடந்து கொள்ளும் முறைகளையும் பற்றி இஸ்லாம் தெளிவாக விளக்குகிறது.

*''படைத்த இரட்சகனுக்கு அடுத்ததாக நன்றி பாராட்டவும், கீழ்படியவும், தகுதியானவர்கள் பெற்றோர்களே என்றும் அவர்களுக்கு நன்றி செலுத்தவும் பணிவிடை செய்யவும் தவறினால் தண்டனை பெற வேண்டி ஏற்படும் என்றும் அல்லாஹ் எச்சரிக்கை செய்கிறான்.''*

அல்லாஹ் தனது திருமறையில் தாய் தந்தையர் பற்றிய கட்டளைகளை வலியுறுத்திக் கூறியிருக்கிறான். ''தாய் தந்தையருடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்குத் தொல்லை கொடுக்காதீர்கள். அவர்களின் பேச்சைப் பணிவுடன் கேளுங்கள். அவர்கள் செய்த உதவிக்கு நன்றி செலுத்துங்கள்.''

பெற்றோர்களின் மனம்நோகும்படி நடக்கும் போது எமது வாழ்வில் தோல்வியையே எதிர்நோக்க வேண்டிவரும், வெற்றிகிட்டாது, பெரும் நஷ்டவாளிகளாக ஆகிவிடுவோம்.

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்து ''சொந்த நாட்டையும், பிறந்த வீட்டையும் விட்டு இறைவழியில் போராட நான் கிளம்புகிறேன். தங்களின் திருக்கரம் பற்றி நான் பைஅத் செய்கிறேன். இதற்கான பிரதிபலனை அல்லாஹ்விடம் மட்டுமே வேண்டி நிற்கின்றேன்.'' என்றார். இதைக்கேட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களுக்கு தாய் தந்தையர் உண்டா? என்று வினவினார்கள். ''இறைவன் அருளால் இருவரும் இருக்கிறார்கள்.'' என்று மறுமொழி வந்தது. ''அப்படியாயின் அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள். அத்தொண்டானது இறைவனிடத்தில் ஹிஜ்ரத் மற்றும் ஜிஹாதின் நன்மையை ஈட்டித்தரும்''. என்று அவர்கள் மொழிந்தார்கள். மேலும் ''உங்களுடைய சுவர்க்கமும், நரகமும் உங்களின் பெற்றோர் தாம்'' என்றார்கள். மேலும் ''பெற்றோர்களின் விருப்பம் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஈடாகும்'' என்றார்கள்.

ஆகவே தாய் தந்தை சொல்வதை அன்புடன் கேட்டு அவர்களுக்கு நன்மையும், தொண்டும் செய்து அவர்கள் செய்த உதவிகளுக்கு நன்றியும் செலுத்தி, அவர்களிடம் மிகவும் பணிந்து தாழ்மையுடன் நடந்து கொண்டால் சொர்க்கத்தை அடைவீர்கள். இதற்கு மாறாக அவர்களுக்குத் தொல்லை கொடுத்து, தவறாகவும் கடுமையாகவும் அவர்களுடன் பேசி நடந்து கொண்டால் கொதிக்கும் நரக நெருப்புக்கு இரையாவீர்கள்.

இதனால் தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தியுள்ளார்கள்.

*''உங்கள் பெற்றோர்களில் ஒருவரோ, அல்லது இருவரோ முதிய வயதடைந்து உங்களை அண்டி வாழ்ந்தால் அவர்களை வெறுப்பூட்டும்படி ''சீ'' என்று சொல்லாதீர்கள்.'' என்று அல்லாஹ் கூறுகின்றான். (17:23)*

வெறுப்பூட்டும் வண்ணம் ஒரு வார்த்தையேனும் நாவில் வரக் கூடாது. உங்களுக்கு விருப்பமில்லாத வார்த்தைகளால் அவர்கள் பேசினாலும் நீங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள்.

அதற்காக அவர்களை கடிந்து பேசி கேவலமடையச் செய்யாதீர்கள். எப்பொழுதும் அவர்களை சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருக்க முயற்சி செய்யுங்கள். அல்லாஹ்வின் பொருத்தம் தந்தையின் பொருத்தத்தில் உள்ளது.

தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்வதன் மூலம் இம்மையிலும், மறுமையிலும் வெற்றியடைய முடியும். பெற்றோருக்குத் தொண்டு செய்வதால் ஆயுளும் அதிகரிக்கின்றது. உணவில் அபிவிருத்தியும் ஏற்படுகின்றது என்று அல்லாஹ் கூறுகின்றான்.

*''உனது தாயின் காலடியிலே சுவர்க்கம் இருக்கிறது'' எனவே உனது தாயை பற்றிக்கொள்வீராக. என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் ஒரு ஹதிஸில் நற்பணிகளுக்கு அதிகம் உரிமையுடையோர் யார்? என்று ஒருவர் நபிகளிடம் கேட்க அதற்கு நபி அவர்கள் ''உனது தாய்'' என்று மூன்று முறை பதில் சொல்லிவிட்டு நான்காவதாக உனது தந்தை என்று கூறினார்கள்.(புகாரி- முஸ்லிம்)*

பெற்றோருக்கு நன்மை புரிந்து அவர்களது உள்ளங்களை மகிழ்ச்சிப் படுத்துவதை இஸ்லாம் ஓர் இபாதத் எனக்கருதுகிறது. எனவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருவன் தன் தாயை மலர்ந்த முகத்துடன் பார்ப்பது தர்மம் செய்வதை விட மேலானதாகும் என்று கூறியுள்ளார்கள்.

பெற்றோருக்குப் பணிவிடை செய்வது அல்லாஹ் மனிதனுக்கு வழங்கிய பாக்கியமாகும். மனம் சலியாது பணிவிடை செய்ய வேண்டும். பெற்றோர் வயோதிபத்தை அடைந்த நிலையில் அவர்களின் அதிருப்தியையும், வெறுப்பையும் பெற்றுக்கொள்பவன் துர்பாக்கியசாலி ஆவான்.

எனவே தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். ''எவன் தன் பெற்றோரை அல்லது அவர்கள் இருவரில் ஒருவரை முதுமையடைந்த நிலையில் பெற்று அவர்களுக்குப் பணிவிடை செய்து சுவர்க்கத்தை அடைந்து கொள்ளவில்லையோ அவன் நாசமாகட்டும்.'' (அல்ஹதீஸ்)

இவற்றிலிருந்து பெற்றோருக்குப் பணிவிடை செய்து அவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வது பிள்ளைகளின் பொறுப்பாகும் என்பதை விளங்கிக் கொள்ளலாம். அவ்வாறின்றி பெற்றோரைத் துன்புறுத்துவது, அவர்களை அடிப்பது, அவர்களிடம் இருந்த பொருட்களை, சொத்துக்களை அபகரித்து விட்டு வீட்டை விட்டு விரட்டுவது போன்றன பெரும் பாவங்களாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாவது,

*''அவர் நஷ்டமடையட்டும். நஷ்டமடையட்டும், நஷ்டமடையட்டும்'' என்று மூன்று முறை கூறினார்கள். யார் யாரஸூல்லாஹ் என வினவப்பட்டபோது ''யார் தனது பெற்றோர் இருவரையுமோ, அல்லது ஒருவரையோ அவர்களின் வயோதிப வயதில் பெற்றிருந்தும் அவர்களுக்குப் பணிவிடைசெய்வதன் மூலம் சுவனம் நுழையவில்லையோ அவனாகும்'' எனப் பதிலளித்தார்கள் (முஸ்லிம்)*

மேலும் இன்னொரு ஹதீஸில் ''ஒரு மனிதன் தனது தந்தையின் மரணத்துக்குப்பின் தனது தந்தையின் நண்பர்களுடனும், உறவினர்களுடனும் உறவைப் பேணிக் கொள்தல் மிகச் சிறந்தது.'' பெற்றோரை மட்டுமன்றி பெற்றோரின் மீது அன்பும் பாசமும் கொண்ட அனைத்து மனிதர்களுடைய கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு மக்களையே சாரும்.

ஆகவே பெற்றோருக்கு மதிப்பளித்து பணிவிடை செய்வது அனைவரினதும் கடமையாகும்.

*‘‘அவனையன்றி வேறு எதனையும் நீங்கள் வணங்கக்கூடாது என்றும், தாய் தந்தைக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும் உமது இறைவன் விதித்துள்ளான்.’’ என அல்லாஹ் கூறியுள்ளான். இந்தக் குர்ஆன் வசனம் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையை வலியுறுத்துகிறது. இவ்வாறு பெற்றோருக்கு நாம் செய்யும் கடமைகள் சம்பந்தமாக அல்-குர்ஆனில் அனேக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

## செயற்பாடுகள்

**சுருக்கமாக விடை தருக.**

1. நாம் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பட்டியற்படுத்துக?

2. பெற்றோருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் இரண்டு ஹதீஸ்களையும், இரண்டு குர்ஆன் வசனங்களையும் தருக?

3. பெற்றோருடன் பேசும் போது நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குமுறைகள் யாவை?

4. பெற்றோர் எமக்குச் செய்ய வேண்டிய உதவிகளைக் கூறுக?

## 4.5 ஹுகூகுல் இபாத்

அல்லாஹ் அவனது பிரதிநிதியாக மனிதனைப் படைத்துள்ளான். அதனால் ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ்வுக்குச் சில கடமைகளை நிறைவேற்ற வேண்டியவனாக உள்ளான். இவ்வாறு அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய கடமைகளை ஹுகூகுல்லாஹ் என வழங்குவர்.

அல்லாஹ்வை இறைவனாக ஏற்றுக் கொள்வது, அவனை வணங்கி வழிபடுவது, அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவது, அவனது தூதரான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை றஸுலாக ஏற்றுப் பின்பற்றுவது போன்றன ஹுகூகுல்லாஹ்வில் அடங்குகின்றன.

மனிதன் தனக்குத் தானே செலுத்த வேண்டிய கடமைகளும், ஏனைய மனிதர்களுக்கும், உயிரினங்களுக்கும், படைப்புகளுக்கும் செலுத்த வேண்டிய கடமைகளும் இருக்கின்றன. அவற்றை ஹுகூகுல்இபாத் எனும் பெயரில் வழங்குவர்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி, மனிதன் இயற்கையாகவே சமூக அமைப்புக்குள் ஒன்றிவாழும் தன்மையுடையவனாகக் காணப்படுகின்றான். நாம் அனைவரும் பகுத்தறிவுடைய மனிதர் என்ற வகையில் மனிதனுக்கு மனிதன் செய்ய வேண்டிய கடமைகள் பல உள்ளன.

*''ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரனாவான்'' என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். மனிதன் கூட்டு வாழ்வை, சமூக அமைப்பை கடைப்பிடிக்க வேண்டும். அவர்கள் கூட்டுறவுடன் செயற்பட வேண்டும் என்பதை அல்-குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. ''விசுவாசிகளே! நல்லமல்களிளும், இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். பாவமான காரியங்களிலும், விரோத நடவடிக்கையிலும் ஒருவருக்கொருவர் உதவிபுரியாதீர்கள்.''*

இவ்வாறு சமூகவாழ்வை வலியுறுத்திய இஸ்லாம் பல்வேறு சட்டதிட்டங்கள் மூலமாக சமூக ஒற்றுமை ஓங்க வழிசெய்துள்ளது. அத்துடன் மனிதன் மனிதனுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் செய்யும் கடமைகளாலேயே அதிக நன்மை பெற்றுக்கொள்ள முடியும். நாட்டில் பேரழிவு ஏற்பட்ட கால கட்டத்தில் ஹுகூகுல்லாஹ்வின் செயற்பாடான ஸுன்னத்தான உம்றாவை நிறைவேற்றுவதை விட ஹுகூக்குல் இபாதின் செயற்பாடான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது சிறந்ததாகக் கொள்ளப்படும்.

தற்கொலை செய்வதும், கொலை செய்வதும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளன. மாறாக உயிரையும், உடலையும் பாதுகாப்பதே கடமையாகும். உயிருக்கு ஆபத்து நேராமல் காப்பது போன்று உடலுக்கு ஊறுவிளையாமலும் பாதுகாப்பது சமூகத்தின் கடமையாகும். சமூகத்திலுள்ள ஒருவன் பாதிக்கப்பட்டால் அக்குற்றம் சமூகத்திலுள்ள அனைவரையும் சாரும்.

பசித்தோருக்கு உணவளித்தல், தாகித்தோருக்கு நீர் புகட்டல், விபத்துக் குள்ளானோருக்கு உதவி புரிதல், தொழிலுக்கு வழிகாட்டல், உடை அளித்தல், வேலை செய்தவருக்கு ஒழுங்காக கூலி கொடுத்தல், நல்லறிவுகளைப் புகட்டுதல், விருத்தாப்பிய நிலையில் உள்ள வயோதிபர், முடவர், செவிடர் ஆகியோருக்கு முடிந்த உதவிகளைச் செய்தல், மார்க்க அறிஞர்களை உருவாக்குதல், கல்விமான்களை உருவாக்குதல், வைத்தியரை உருவாக்குதல் போன்றவை அனைத்தும் மனிதன் மனிதனுக்குச் செய்யவேண்டிய கடமைகளாக அமைகின்றன. இவ்வாறு செய்வதன் மூலம் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையும், பரஸ்பர உறவும் ஏற்படுகின்றது.

இவர்களைத் தவிர சமுதாயத்தில் நலிவுற்ற அங்கவீனர்கள், அநாதைகள், நோயாளர்கள் போன்ற சகோதரர்களுக்கும் சமுதாயத்தில் ஏனைய உறுப்பினர்களுக்கும் உதவி செய்ய வேண்டும். இவ்வாறே நாம் ஏனைய உயிரினங்களைத் தேவையின்றி கொலைசெய்தல், காயப்படுத்தல், கடுமையாக வேலை வாங்குதல், துன்புறுத்தல், உறுப்புக்களைத் துண்டித்தல் போன்றவற்றில் இருந்தும் தடுத்துக் கொள்வதும் எமது கடமையாகும். நன்மைகளை ஏவி தீமைகளை விலக்கி நன்மையான விடயங்களில் ஒத்துழைப்பு வழங்குவதும் ஹுகூக்குல் இபாதாக அமையும்.

*ஒருவர் உலகில் வாழும்போது குடும்ப அங்கத்தவராகவும், நண்பனாகவும், அயலவராகவும், விருந்தாளியாகவும், ஊழியனாகவும், எசமானனாகவும் சமூகத்தில் அங்கம் வகிக்க வேண்டி உள்ளார். அவ்வேளைகளில் சமுதாய உறுப்பினர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைத் தெரிந்து கொண்டு வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடிப்பது ஹுகூக்குல் இபாதாகும்.*

குடும்பத்தின் தலைவனாக அமர்த்தப்பட்டுள்ள ஆண் குடும்பப் பொறுப்புக்களையும் கவனிக்க வேண்டியவனாகவும் உள்ளான். இதற்காக உழைப்பதுவும், செலவுசெய்வதும், வழிகாட்டுவதும் அவன் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. இவ்வாறே பெண்களைப் பொறுத்தவரையிலும் வீட்டின் உறுப்பினர்களுடைய பணிகள் அவளுக்கு ஒப்படைக் கப்பட்டுள்ளன.

இக்கடமையைச் செய்வதற்காக அவள் வீட்டில் அதிக நேரத்தைக் கழிக்கிறாள். இதுவும் ஹுகூகுல் இபாதாக அமைகின்றது.

மேலும் குடும்பத்திற்கு வெளியே உறவினர்கள் அயலவர்களுடன் அன்புடன் பழகுவது, தேவையின் போது உதவுவது, மகிழ்ச்சியின் போது பாராட்டுவது, துக்கத்தின் போது ஆறுதல் கூறுவது, அவர்களின் உரிமைகளை மதித்து நடப்பது போன்ற நடவடிக்கைகளும் உள்ளடக்கப்படும்.

''ஸதகதுல் ஜாரியா'' (நிரந்தர தர்மம்) எனப்படும் செயற்பாடுகளான பொதுப்பாதைகள், கிணறுகள், கழிவறைகள், மருத்துவ நிலையங்கள், கல்விக் கூடங்கள், நூலகங்கள், பள்ளிவாசல்கள் போன்றவற்றை அமைப்பதும் அவற்றைப் பரிபாலிப்பதும், பாதுகாப்பதும், சுற்றாடலைப் பேணுதல் போன்றனவும் சமூகநலன் கருதியே செய்யப்படுகின்றன.

ஹுகூகுல் இபாதில் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல பிற சமூகத்தவர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் ஆகும்.

நாம் பிறசமூகத்தவர்களுடன் எப்படியான தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டும், எப்படியான தொடர்புகளை வைத்துக் கொள்ளக்கூடாது என்பன பற்றியும் முஸ்லிம்களாகிய நாம் தெரிந்து வைத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

மனிதர்கள் எந்தச் சமூகத்ததைச் சேர்ந்தவர்களாயினும் சரி, எந்த மதத்தை சேர்ந்தவர்களாயினும் சரி பசி வந்தால் சாப்பிட வேண்டும், தாகித்தால் நீர் பருக வேண்டும், நோய் வந்தால் சிகிச்சை பெற வேண்டும், வயது வந்தால் விவாகம் செய்து வைக்க வேண்டும், இன்னும் இவை போன்று உலகத்தில் வாழ்வதற்கு என்னென்ன தேவைகள் உள்ளனவோ அவற்றை எல்லாம் மனிதன் என்ற அடிப்படையில் ஏதோ ஒரு வகையில் செய்து தான் ஆகவேண்டும். நாம் முஸ்லிம்கள் என்ற வகையில் இவற்றைச் செய்யும் முறையில் வித்தியாசங்கள் இருந்தாலும் மனித உடல் உறுப்புக்களின் இயக்கங்களும், உணர்ச்சிகளும், உயிர்வாழ்க்கைக்குரிய தேவைகளும் ஒன்றாக விளங்குகின்றன.

பிறமதத்தவர்களுடன் சிநேகமாக இருக்க வேண்டும். பரஸ்பரம் இரு சமூகத்தவரும் உதவி உபகாரங்கள் செய்து நிதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்.

*விசுவாசிகளே! மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்து யுத்தம் புரியாத உங்கள் இல்லங்களில் இருந்து உங்களை வெளிப்படுத்தாதவர்களுக்கு நீங்கள் கருணை காட்டி நன்மை செய்ய வேண்டாம் என்றோ, அவர்களுடன் நீங்கள் நிதானமாக நடந்து கொள்ளக்கூடாது என்றோ அல்லாஹ் உங்களை தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துவோரை நேசிப்பவனாகவே இருக்கிறான்.*

மேலே கூறியவாறு அல்லாஹ்வே தம்முடன் நேசக் கரம் நீட்டி நிற்கும் அல்லாஹ்வின் உயிரினங்களாகிய பிற சமூகத்தவர்களுடன் விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும் என்று கூறி மனிதத் தன்மைக்கு மதிப்பளித்துள்ளான். எனவே எந்த சமூகத்தவராயினும் சரி உதவி புரிதல், கஷ்டப்படுவோரின் கஷ்டத்தை நீக்க முயற்சித்தல் என்பன மனிதனுக்கு மனிதன் செய்ய வேண்டிய கடமையாகும்.

பிற மதத்தவர்கள் சில வேளைகளில் உணராத காரணத்தினால் உபத்திரங்கள் செய்ய முற்பட்டாலும் மனிதத் தன்மையினைக் காட்ட நாம் பின்னிற்கக்கூடாது. இப்படியான சந்தர்ப்பங்களில் நாம் பொறுமையுடன் நடந்து கொள்வதால்தான் இஸ்லாத்தின் சிறப்புகளைப் பிற மதத்தவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. முஸ்லிமல்லாதவர்கள் எம் மதத்தவராயினும் சரி அவர்கள் அனைவரும் பிற மதத்தவர்களே. அவர்களிடம் கருணை காட்டி அன்பாக நாம் நடந்து கொள்வது அவசியமாகும்.

பிறமதத்தவர்கள் தமது சமய கலாசார விடயங்களை அவர்களுக்குரிய இடத்தில் செய்தால் நாம் ஒதுங்கிவிட வேண்டும். அவ்வாறின்றி அவர்களின் சமய விடயங்களில் நாம் குறுக்கிட்டு சண்டை போடுவதோ, தர்க்கம் புரிவதோ கூடாது. அதேவேளை அவர்களின் மதகலாசார வேலைகளைச் செய்யும் போது நாம் அவற்றை செய்வதும், அதில் பங்குகொள்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

எனவே நாம் இஸ்லாம் கூறியுள்ளபடி ஹுகூகுல் இபாதைச் சரியாக நிறைவேற்றி நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

## பயிற்சி

**சுருக்கமான விடை தருக.**

1. ‘‘ஹுகூக்குல் இபாத்’’ என்ற பதம் எதனைக் குறிக்கிறது?
2. ஹுகூக்குல் இபாத் எவ்வாறு சமயப்பணியாகவும் சமூகப்பணியாகவும் அமைந்துள்ளது?
3. மனிதரில் மிகச்சிறந்தவர் யார்?
4. ஹுகூக்குல் இபாதில் அமையக்கூடியவைகள் யாவை?
5. சமுதாயத்தில் நலிவுற்றவர்கள் எனக் கருதப்படுபவர் யார்?
6. உயிர்ப்பிராணிகளுக்கு நாம் செய்யக்கூடியவைகள், செய்யக்கூடாதவைகள் எவை?
7. ‘‘ஸதகதுல் ஜாரியா’’ என்ற பதம் எதனைக் குறிக்கிறது, அவை யாவை?
8. முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்குமிடையேயான வேறுபாடுகள் யாவை?
9. மனிதன் என்ற அடிப்படையில் பிற சமூகத்தினருக்கு செய்யவேண்டிய கடமைகள் யாவை?
10. பிற சமூகத்தவரின் எந்த விடயங்களில் நாம் ஈடுபடலாகாது?

## செயற்பாடுகள்

1. ஹுகூக்குல் இபாத்துக்களை பேணி செய்துவரல்.
2. சமூக முன்னேற்றத்திற்கான பணிகளைப் புரியும் இயக்கங்களையும் கழகங்களையும் அமைத்தல்.
3. மக்கள் நன்மைக்காக சிரமதான வேலைத்திட்டங்களை திட்டமிட்டுச் செய்தல்.
4. பிற சமூகத்தினருடன் மனிதத்தன்மையுடன் நடந்து கொள்ளல்.



இலவச விநியோகத்திற்காக

## 4.6 நடுநிலமை பேணல்

*அல்குர்ஆனில் ''நீங்கள் மற்ற மக்களுக்குச் சாட்சியாகவும், உங்கள் மீது நபி சாட்சியாகவும், இருக்கும் பொருட்டே நான் உங்களை நடுநிலை வகிக்கும் கூட்டமாக ஆக்கினோம்'' என்று அல்லாஹ் முஸ்லிமை நோக்கி கூறுகிறான். மேலும் ''மக்கள் முன்னிலையில் முகத்தை வேறு பக்கம் திருப்ப வேண்டாம். பூமியில் பெருமை கொண்டவனை அல்லாஹ் நேசிப்பதில்லை. நீ நடுத்தரமான முறையில் நடந்துகொள், உன்னுடைய சப்தத்தை மெதுவாக்கிக் கொள். சப்தங்களின் வெறுக்கத்தக்கது கழுதையின் சப்தமாகும்.'' என்றும் கூறியுள்ளான்.*

''மக்களே! நடுநிலைமையைக் கைக்கொள்ளுங்கள், நடுநிலைமையைக் கைக்கொள்ளுங்கள், நடுநிலைமையைக் கைக்கொள்ளுங்கள். ஒருவன் தன்னைத் தானே கஷ்டத்திற்குள்ளாக்குவதல்லாமல், அல்லாஹ் அவனை கஷ்டத்திற்கு உள்ளாக்குவதில்லை. எந்த அளவிற்கு உங்களுக்கு சக்தி இருக்கிறதோ, அந்த அளவிற்கு அமல் (நற்கருமம்) செய்யுங்கள். நீங்களே உங்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கிக் கொண்டாலேயன்றி, அல்லாஹ் உங்கள் மீது கஷ்டத்தைப் போடப்போவதில்லை.'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் இன்னொரு ஹதீஸில் ''நல்லொழுக்கமும் நல்லெண்ணமும், நடுநிலைமையும், நபித்துவத்தில் 70ல் ஒரு பங்காயிருக்கும். செலவுகளில் நடுநிலை வகிப்பதே ஜீவனோபாயத்தில் பாதியாகும். மனிதர்களிடம் அன்பாயிருத்தல், புத்திசாலித்தனத்தில் பாதியாகும். (யாரிடமும்) கேட்பதானால் நல்லமுறையில் கேட்பது பாதியறிவாகும்''.

எவனுக்கு நற்கருமங்கள் செய்வதில் நிதானம் இல்லையோ அவன் தன் மதத்தை நன்றாய் ஆராய்ச்சி செய்தவனாக மாட்டான். நீங்கள் பொருள்களிலும் செலவுகளிலும் அளவு கடந்து போவதைப்பற்றி ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்கள். நிதானமாகயிருக்கும்படி நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நிதானமாக இருந்து வந்த எந்த சமூகமும் எளிமையாய்ப் போனதில்லை.

ஆகவே ஒவ்வொரு முஸ்லிமுடைய வாழ்க்கையிலும் நிதானத்தை (நடுநிலைமை) கடைப்பிடிப்பது அவசியமாகின்றது. ''நிதானமே'' மனிதனை மனிதனாக வாழவைக்கும் என்பது மேற்கூறிய ஹதீஸிலிருந்து புலனாகின்றது. முஸ்லிம்களாகிய நாங்கள் அனைவரும் நிதானத்தைக் கடைப்பிடித்து அனைத்து சமூகத்துடனும் ஒற்றுமையாக வாழ்ந்து வெற்றி பெறுவோமாக.

### செயற்பாடு

1. இஸ்லாம் நடுநிலைமையைப் பற்றி எவ்வாறு கூறுகின்றது?
2. நடுநிலைமை ஏன் அவசியமாகின்றது?

### செய்கை

1. நடுநிலைமை - நிதானம் பற்றிக்கூறிய ஹதிஸ் குர்ஆன்வசனத்தை மனனமிடுதல்.